பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
16 07 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u> -

1. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இம்மாதம் 22-ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில், வரும் ஞாயிற்றுக்கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

2. தரமான விளைப் பொருட்களை உற்பத்தி செய்ய விவசாயிகளை வேளாண் விஞ்ஞானிகள் ஊக்கவிக்க வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பாதுகாப்புத் துறைக்குத் தேவையான 346 பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

4. மொரீஷியஸுடன் விண்வெளித்துறை, அறிவியல் ஆராய்ச்சி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பதற்கான ஒப்பந்தங்கள் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் முன்னிலையில் கையெழுத்தானது.

5. கேரளாவில் பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இம்மாதம் 22-ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில், வரும் ஞாயிற்றுக்கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

மத்திய பட்ஜெட்டை இம்மாதம் 23-ஆம் தேதி நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

மூன்றாவது முறையாக பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பொறுப்பேற்ற பின், தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

வேளாண் விஞ்ஞானிகள் விவசாயிகளை நேரடியாக சந்தித்து தரமான விளைப் பொருட்களை உற்பத்தி செய்ய ஊக்கப்படுத்த வேண்டுமென்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் இன்று 96-வது இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் நிறுவன நாள் விழாவை தொடங்கி வைத்து பேசிய அவர், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது, வேளாண் தொழில்நுட்பம் தொடர்பான தகவல்களை வழங்குவது உள்ளிட்ட விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மக்களின் உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

உணவு தானிய உற்பத்தி, மீன்வளம் மற்றும் பால்வளத்தைப் பெருக்குவதில் நாடு தன்னிறைவை எட்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பருப்பு வகைகள் மற்றும் உணவு எண்ணெய் உற்பத்தியிலும் தன்னிறைவை எட்டுவதற்கு அரசு முழுவீச்சில் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வேளாண் உற்பத்தியை பாதிக்காத வகையில் இயற்கை விவசாயத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை விஞ்ஞானிகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் திரு சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

பாதுகாப்புத் துறைக்குத் தேவையான 346 பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ராணுவத்துக்குத் தேவையான தளவாட உற்பத்தியில் தன்னிறைவை எட்டும் நோக்கில் இறக்குமதியை குறைக்கும் முயற்சியாக 346 பொருட்களைக் கொண்ட ஐந்தாவது பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

ராணுவத்துக்குத் தேவையான உதிரிப் பாகங்கள், கச்சாப் பொருட்கள் ஆகியவற்றை ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை 12 ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் இந்திய ராணுவத்துக்காக உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று மொரீஷியஸ் பிரதமர் திரு **Pravind Kumar Jugnauth**-ஐ இன்று போர்ட் லூயிஸில் சந்தித்தார்.

இந்தியா – மொரீஷியஸ் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசித்த அவர், பிரதமர் திரு நரேந்திரமோடி, திரு ஜக்நாத் வாழ்த்துக்களைத் தெரிவித்ததாகக் கூறினார்.

திரு ஜக்நாத்தும், திரு ஜெய்சங்கரும் 12 சமூக வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்தனர்.

விண்வெளித்துறையில் ஒத்துழைப்பு, அறிவியல் ஆராய்ச்சி, சமஸ்கிருதம் மற்றும் இந்திய தத்துவப் படிப்புகளுக்கான இருக்கையை மொரீஷியஸில் ஏற்படுத்துவது ஆகியவற்றுக்கான ஒப்பந்தங்கள் இரு தலைவர்கள் முன்னிலையிலும் கையெழுத்தாகின.

மொரீஷியஸ் குடியுரிமை அட்டைகளை ஏழாவது தலைமுறையாக அங்கு வசித்து வரும் இந்திய சம்சாவளியினருக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் வழங்கினார்.

அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த திரு ஜெய்சங்கர், மொரீஷியஸ் நாட்டின் நவீனமயமாக்கல் மற்றும் வளர்ச்சிக்கான பயணத்தை இந்தியா பன்னெடுங்காலமாக மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகளை மேலும் வளர்ப்பதற்கு இந்தியா மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் என்று அவர் கூறினார்.

மூன்றாவது முறையாக பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு இந்தியாவில் அமைந்த பிறகு, தமது முதல் வெளிநாட்டுப் பயணம் இது என்று குறிப்பிட்ட திரு ஜெய்சங்கர், மொரீஷியஸுடன் கொண்டுள்ள ஆழமான நட்புறவை இது வெளிப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

உச்சநீதிமன்ற நீதிபதிகளாக திரு கோட்டீஸ்வர் சிங், திரு ஆர் மகாதேவன் ஆகியோரை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நியமித்துள்ளார்.

திரு கோட்டீஸ்வர் சிங் தற்போது ஜம்மு-கஷ்மீர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும், திரு ஆர் மகாதேவன் சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாகவும் பதவி வகித்து வருகின்றனர்.

**[]<<<>>>[]**

காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு காவிரி நீரை உடனடியாக விடுவிக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தை தமிழக சட்டமன்ற அனைத்துக் கட்சிக் கூட்டம் வலியுறுத்தியுள்ளது.

சென்னையில் இன்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காவிரி நடுவர்மன்றம் 2007-ஆம் ஆண்டு அளித்த இறுதி தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்றம் 2018-ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பு மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்றுக்குழு தற்போது பிறப்பித்த உத்தரவு ஆகியவற்றை ஏற்க மறுத்து தமிழகத்திற்குரிய தண்ணீரை தர முடியாது என்று மறுத்துள்ள கர்நாடக அரசுக்கு கண்டனம் தெரிவித்து மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்திற்குரிய தண்ணீரை உடனடியாக பெறுவதற்கு தேவைப்பட்டால் உச்சநீதிமன்றத்தை நாடி சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழக சட்டமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

கர்நாடகாவின் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அணைக்கு இன்று காலை ஐயாயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து மாலை நிலவரப்படி 16 ஆயிரத்து 600 கன அடியாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தமிழக எல்லையான பில்லிகூண்டுலுவுக்கு மாலை ஆறு மணி நிலவரப்படி வினாடிக்கு 21 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

**[]<<<>>>[]**

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கு இந்தியா ஆக்கப்பூர்வமான பங்களிப்பை அளித்து வருவதாக நித்தி ஆயோக்கின் துணைத்தலைவர் திரு சுமன் பெர்ரி ஐ நா பொதுச்சபைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

ஐ நா பொதுச்சபையில் உரையாற்றிய அவர், உள்ளார்ந்த வளர்ச்சியை உறுதி செய்வதிலும், நீடித்த வளர்ச்சியை எட்டுவதிலும் இந்தியா உறுதியுடன் இருப்பதாகக் கூறினார்.

நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் மின்னணு கட்டமைப்பை நிர்மானிப்பதில் இந்தியா வெற்றி கண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்னணு கட்டமைப்பை பயன்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பை உறுதி செய்வதற்கான இலக்கு எட்டப்பட்டுள்ளதாகவும், இணையவழி முறைகேடுகள் தடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் ஜனநாயகக் கட்டமைப்பு உறுதியாக உள்ளதாகத் தெரிவித்த திரு பெர்ரி, மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

2030 ஆண்டுக்குள் நாட்டிலிருந்து வறுமையை முற்றிலுமாக அகற்றுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பருவநிலை மாறுபாடுகளை எதிர்கொள்ளும் வகையிலும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும், கரிமப் பொருட்கள் வெளியாவதைத் தடுக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு சுமன் பெர்ரி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

கேரளாவில் பெய்து வரும் கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் வட பகுதியில் உள்ள ஒன்பது மாவட்டங்களுக்கு கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மலைப்பகுதிகளில் நிலச்சரிவுகளால் விளைநிலங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

கனமழைக்கு இதுவரை நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

மாநிலத்தில் உள்ள அனைத்து முக்கிய அணைகளும் நிரம்பியுள்ளன.

போக்குவரத்தும், மின் விநியோகமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கேரள கடலோரப் பகுதியில் கடல் அதிக சீற்றத்துடன் காணப்படுவதால் மீனவர்கள் கடலுக்குக் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலத்தில் 17 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தால் ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஷாஜகான்பூர், **Bareilly, pilibhit** ஆகிய நகரங்களிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

வெள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்த முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், 24 மணி நேரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தேவையான உதவிகளை செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பயிர்ச்சேதம், பொருட்சேதம் உள்ளிட்டவை குறித்து சரியாக மதிப்பீடு செய்ய வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

வானிலை அறிக்கையை தொடர்ந்து கவனித்து பெருமழையால் ஏற்படும் சேதத்தை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதை தொடர்ந்து கவனித்து நடவடிக்கை எடுக்குமாறும் திரு யோகி ஆதித்யநாத் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில பகுதிகளில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

கோவை, நீலகிரி மாவட்டங்களில் அதி கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணிக்கு எதிரான ஆட்டத்தில் திருச்சி அணி முதலில் பேட் செய்து வருகிறது.

கோவையில் சற்று முன் தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற கோவை அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.